GOVERNMENT ... 15 MAY ... LIBRARY

Register No. 

**TA5A**

**5424–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year – Regular Course).

Third Year – Fifth Semester

CIVIL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The period of limitation will be extended for the payment of money on a debt" – Explain.

   கடனுக்காக பணம் செலுத்தும் போது காலவரையறை நீட்டிக்கப்படுகிறது- விளக்குக.

2. What is the effect of fraud and mistake in the law of limitation?

   காலவரையறை சட்டத்தில் மோசடி மற்றும் தவறு ஆகியவற்றின் விளைவு என்ன?

3. State the procedure to be followed while filing suit against the government.

   அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி கூறவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the rules relating to joinder to parties and joinder of causes of action.

   தரப்பினர்கள் சேர்க்கை வழக்கு மூலங்களின் சேர்க்கை ஆகியவை தொடர்பான விதிகளை விளக்குக.

5. State the different stages of a civil suit from its institution till the judgement is delivered.

   ஒரு உரிமையியல் வழக்கு தொடுக்கப்பட்டதிலிருந்து தீர்ப்புரை வழங்கப்படும் வரை உள்ள பல்வேறு நிலைகளை கூறுக.

6. Explain the different modes of service of summons under the Civil Procedure Code.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அழைப்பாணை சார்வு செய்யப்படும் பல்வேறு முறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Jurisdiction

ஆள்வரை

(b) Execution

நிறைவேற்றுதல்

(c) Appeal

மேல் முறையீடு

(d) Caveat petition

முன்னெச்சரிக்கை மனு

(e) Ex parte Decree

ஒருதலைபட்ச தீர்ப்பாணை

(f) Reference

சாட்டுகை

(g) Inherent powers of High Court

உயர்நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Akash sells to Bala two plots of land. Plot-1 is claimed by Charu and plot-2 is claimed by Chandra by way of Adverse possession. Whether Charu and Chandra are entitled to join in one suit as plaintiffs?

பாலா என்பவருக்கு ஆகாஷ் என்பவர் தனது இரண்டு மனைகளை விற்பனை செய்கிறார். முதல் மனையினை சாரு என்பவரும் இரண்டாவது மனையினை சந்திரா என்பவரும் எதிரிடை பாத்தியம் கோருகின்றனர். சாருவும், சந்திராவும் ஒரே வழக்கின் வாதிகளாக சேர்க்க முடியுமா?

9. Rekha filed a suit against Raja for a claim of partition of property. When the suit is pending Raja came for compromise. Accordingly they obtained a compromise decree. When Rekha approaches for execution of compromise decree, Raja refused. Advise Rekha.

பாகப்பிரிவினை வழக்கு ஒன்றினை ரேகா என்பவர் ராஜா என்பவருக்கு எதிராக தொடுக்கிறார். வழக்கு நிலுவையில் இருக்கும் போது ராஜா சமரசத்திற்கு முயல்கிறார். அதன் படி சமரச தீர்ப்பாணையை இருவரும் பெறுகின்றனர். ரேகா சமரச தீர்ப்பாணையினை நிறைவேற்ற முனையும் போது ராஜா மறுக்கிறார். ரேகாவிற்கு ஆலோசனை வழங்கவும்.

10. A suit was filed by Anu against Banu for claiming damages for defamation. On a particular hearing both the parties are required to be present, Anu was absent. Consequently the suit was dismissed. Discuss the remedy available to Anu.

அனு என்பவர் பானு என்பவர் மீது அவதூறுக்கான நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்கிறார். இருதரப்பினரும் நீதிமன்றத்தில் நிச்சயமாக ஆஜராக வேண்டிய தினத்தில் அனு என்பவர் ஆஜராக தவறுகிறார். வழக்கு தள்ளுபடி செய்யப்படுகின்றது. அனுவிற்கு கிடைக்கக் கூடிய பரிகாரம் என்ன?

(2)

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023
LIBRARY

Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

**TA5B** **5425–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the changes made in the present Criminal Procedure Code to ensure a fair trial to the accused person?

   குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு ஓர் நேரிய விசாரணையை உறுதிப்படுத்த தற்போதுள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள மாற்றங்கள் யாவை?

2. State the provisions related to transfer of criminal case.

   ஒரு குற்ற வழக்கினை மாற்றுதல் தொடர்பான விதிமுறைகளை விளக்கவும்.

3. "For every distinct offence of which any person is accused there shall be a separate charge and every such charge shall be tried separately". – Explain the above rule and discuss the exception.

   ஒரு நபர் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட குற்றத்திற்கும் தனிப்பட்ட குற்றச்சாட்டு இருக்க வேண்டும், மற்றும் ஒவ்வொரு குற்றச்சாட்டும் தனித்தனியே விசாரிக்கப்பட வேண்டும். மேற்கண்ட விதியினை விளக்கி விதிவிலக்கினை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is the procedure to be followed by the courts for the trial of accused person of unsound mind?

   குற்றம் சட்டப்பட்ட நபர், மனநிலை பாதிக்கப்பட்டவராக இருந்தால், நீதிமன்றங்கள் பின்பற்ற வேண்டிய வழக்கு விசாரணை நடைமுறைகள் யாவை?

5. What are the provisions relating to granting of bail to accused persons in criminal cases?

குற்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு, வழங்கக்கூடிய பிணை தொடர்பான வகையங்கள் யாவை?

6. "Justice system available for adults is not considered suitable for being applied to juveniles" – Comment.

"பெரியோர்களுக்கான நீதிமுறை என்பது இளவர்களுக்கு ஏற்புடையதாக இருப்பது இல்லை" – கருத்துரைக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Memorandum of arguments

வாதங்களின் குறிப்பாணை

(b) Prosecution for contempt

அவமதிப்பிற்கான குற்ற வழக்கீடு

(c) Withdrawal of complaint.

குற்றமுறையீட்டை திரும்பப் பெறல்

(d) Contents of a Judgment

தீர்ப்பின் உள்ளடக்கம்

(e) Child Welfare Committee

சிறார் நலக் குழுமம்

(f) Merits of Probation

நன்னடத்தை விடுவிப்பின் நன்மைகள்

(g) Duties of Public Prosecutor.

குற்றப் பொது வழக்குத் தொடுப்பவரின் கடமைகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A police officer has recorded information regarding a cognizable offence in his police station diary on the basis of a phone call. Can it be regarded as FIR?

ஒரு காவல்துறை அதிகாரி, காவல் நிலைய பொறுப்பிலிருந்த போது, தொலைபேசி வாயிலாக பெறப்பட்ட புலன் கொள்ளக்கூடிய குற்றமொன்றை பற்றிய தகவலை காவல்நிலைய நாட்குறிப்பில் பதிவு செய்கிறார். அது முதல் தகவல் அறிக்கையாக கருதப்பட முடியுமா?

9. "A" is charged for having caused the death of one "B" by rash and negligent driving. He admitted the charges and was convicted. The dependants of the victim made a claim for compensation against "A". Decide.

"அ" என்பவர் தன்னுடைய அதிக வேகம் மற்றும் கவனமின்மையான ஓட்டுதல் மூலமாக "ஆ" என்பவருக்கு மரணம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்படுகிறார். "அ" அக்குற்றத்தை தாமே ஒப்புக் கொண்டதால் தண்டிக்கப்படுகிறார். இந்நிலையில் இறந்து போன "ஆ"வின் வாரிசுகள் "அ"விடமிருந்து இழப்பீடு கோரி விண்ணப்பம் செய்கிறார்கள். தீர்மானிக்க.

10. "A" carried on the trade of auctioning vegetables in a private house. Those persons who brought vegetables for sale kept their carts on the public road in a manner causing obstruction to road traffic. The noise caused by auctioning the vegetables caused discomfort to the people living in the locality. The Executive Magistrate on receiving the information passes an order under S.133 of Cr.P.C. restraining "A" from auctioning the vegetables. "A" challenges the order. Advise "A".

"அ" என்பவர் தனக்கு சொந்தமான தனி வீட்டில், காய்கறிகள் ஏலம் விட்டு விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறார். அவரிடம் காய்கறிகள் விற்க வரும் நபர்கள் தங்களது வண்டிகளை, பொதுத் தெருவில் பொது மக்களுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்படக் கூடிய் வகையில் நிறுத்திக் கொண்டு இருந்தனர். மேலும், காய்கறிகளை ஏலம் விடும் சத்தமானது அருகிலுள்ள பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இருந்து வந்தது. இது குறித்து தகவல் பெற்ற நிருவாகத்துறை நடுவர், கு.வி.மு.ச. பிரிவு 133-ன் படி, "அ"வின் தொழிலுக்கு தடை விதிக்கிறார். "அ" அந்த உத்தரவை எதிர்க்கிறார். அவருக்கு தகுந்த ஆலோசனை வழங்குக.

---

(3)

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023
LIBRARY

Register No.

**TA5C**

5426-22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

ENVIRONMENTAL LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Right to wholesome environment is fundamental right" - comment.

   "முழுமையான சுற்றுப்புற சூழ்நிலைக்கான உரிமையானது ஒரு அடிப்படை உரிமையாகும்." - கருத்துரை தருக.

2. 'Polluter pays Principle' is an essential feature of sustainable development – comment.

   'மாசுக்கேடு விளைவிப்பவரே இழப்பீடு செலுத்தும்' கோட்பாடு நீடித்த வளர்ச்சியின் முக்கிய சாராம்சமாக விளங்குகின்றது - விளக்கவுரை தருக.

3. Explain the procedure to be adopted in constituting reserve forest and protected forest.

   ஒதுக்கப்பட்ட காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட காடுகளை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறையை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the significance of the latest Coastal Regulation Zone Management notification.

   ஒழுங்குபடுத்தப்பட்ட கடலோர பராமரிப்பு மண்டலம் குறித்த நிகழ் அறிவிக்கையின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

5. Explain the importance of various international conventions for the protection of environment.

சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க உள்ள பல்வேறு பன்னாட்டு உடன்படிக்கைகளின் முக்கியத்துவத்தை விளக்கவும்.

6. "Animal welfare Legislations failed to protect the interest of animals in India" – Comment.

"இந்தியாவில் விலங்கின நல சட்டங்கள் விலங்குகளை பாதுகாப்பதில் இருந்து தோல்வியுற்றது" - கருத்தாய்வு செய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Precautionary Principle.

முன்னெச்சரிக்கைக் கொள்கை

(b) Ecotourism

சூழல் - சுற்றுலா

(c) National Forest Policy

தேசீய காடுகள் கொள்கை

(d) Kamalnath Case.

கமல்நாத் வழக்கு

(e) Bio Reserve

பல்லுயிர் இருப்பு

(f) Depletion of Ozone layer

ஓசோன் அடுக்குகளின் சிதைவு

(g) Acid rain

அமில மழை

PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' hospital with 100 beds facility did not have incinerators to treat the biomedical waste. "Awareness" NGO group filed a case against the hospital on the ground that it violates Bio-medical waste rules. Decide.

'அ' மருத்துவமனை நூறு படுக்கைகளை கொண்டு இருந்தாலும் உயிர் மருத்துவ திடக்கழிவுகளை பண்டுவம் செய்ய எரியூட்டி உபகரணங்கள் அமைக்கப்படாமல் இருந்தது. இது நடைமுறையில் உள்ள உயிர் மருத்துவ திடக்கழிவு விதிகளை மீறுவதாக "அவேர்நெஸ்" என்ற அரசுசாரா அமைப்பு வழக்கிட்டது - தீர்மானிக்கவும்.

9. 'A' allows his cattle to graze in the adjacent reserved forest area. His cattle destroyed the public plantation of the reserve area. The Forest Officer seized the cattle. 'A' files the case. Decide.

அருகாமையில் உள்ள ஒதுக்கப்பட்ட காடுகளில் 'அ' என்ற நபர் தனது கால்நடைகளை மேய விடுகின்றார். அவரது கால்நடைகள் ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள அரசு தோட்டங்களை அழித்து விடுகின்றது. வன அலுவலர் கால்நடைகளை கைப்பற்றுகிறார். எனவே 'அ' வழக்கிடுகிறார்- தீர்மானிக்கவும்.

10. 'A' a poacher was arrested and tried before the court for trading 200 kgs. of ivory in Periyar Tiger Reserve by killing the elephants and burying them. 'A' contends that as long as carcasses of the killed elephants are found he cannot be punished. Decide.

பெரியார் புலிகள் பாதுகாப்பு மையத்தில் உள்ள யானைகளை வேட்டையாடிக் கொன்று 200 கிலோ தந்தம் எடுத்து, கொன்ற யானைகளை புதைத்ததாக, 'அ' என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டார். கொல்லப்பட்ட யானைகளின் பிணங்களை கண்டெடுக்கும்வரை தன்னை தண்டிக்க இயலாது என 'அ' என்பவர் வாதிடுகிறார் - தீர்மானிக்கவும்.

---

GOVERNMENT LAW C... ...HY
15 N...
* LIBRARY *

Register No. | | | | | | | | |

**TA5D**

**5427–22**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LABOUR LAW – II

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Briefly describe the liability of the employer to pay compensation for the injury suffered by a employee, Under the Employee's Compensation Act, 1923.

   1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், பணியாளர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு பணியாண்மையரின் இழப்பீடு வழங்குவதற்கான பொறுப்பினை சுருக்குமாக கூறவும்.

2. Explain the provisions of the Factories Act, 1948 dealing with the protection of women and young persons.

   பெண்கள் மற்றும் இளம் நபர்களின் பாதுகாப்புப்பற்றி தொழிற்சாலைகள் சட்டம் 1948ம் ஆண்டின் வகையங்களை விவரி.

3. Describe in brief the object, applicability and extent of the Payment of Bonus Act, 1965 and also its main provisions.

   மீதூதியச் சட்டம், 1965ன் நோக்கம், பொருந்தும் தன்மை, அளாவுகை மற்றும் அச்சட்டத்தின் முக்கிய சட்டப்பிரிவுகளையும் சுருக்கமாக விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the powers of the Employees State Insurance Court.

   தொழிலாளர் அரசுக் காப்பீடு நீதிமன்றத்தின் அதிகாரங்களை விவரிக்கவும்.

5. Explain the meaning and concept of social security.

   சமூகப் பாதுகாப்பு கருத்தமைவு பற்றி விவரிக்கவும்.

6. What are the salient features of the Payment of Gratuity Act, 1972?

   பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972ன் சிறப்பம்சங்கள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Restrictions on opening and closing of shops.

கடைகள் திறப்பது மற்றும் மூடுதல் குறித்த கட்டுப்பாடுகள்.

(b) Employees' Family pension scheme.

தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத்திட்டம்

(c) Manufacturing process.

உற்பத்தி முறை

(d) Set on and set off

ஒதுக்கி வைத்தல் மற்றும் எதிரீடு செய்தல்

(e) Total Disablement

முழு தகுதியிழப்பு

(f) Commercial establishment

வணிக தொழிலகங்கள்

(g) Powers of the commissioner under the Employees' Compensation Act, 1923.

தொழிலாளர் இழப்பீடு சட்டம் 1923 கீழ் ஆணையரின் அதிகாரங்கள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ram, a worker, is asked by his employer to check the leakage of an empty oil tanker. Ram after entering the oil tanker lighted the match box to check for leakage. The fire caught up and Ram died on the spot. His wife filed a case against the Employer. Will she succeed in her attempt? Decide and give reasons.

முதலாளியானவர் தன்னிடம் பணி புரியும் பணியாளரை காலியான எண்ணெய் தொட்டியில் ஏற்பட்டுள்ள கசிவினை சரி செய்யும்படி பணிக்கின்றார், ராம் என்ற அந்த பணியாளர் காலி எண்ணெய் தொட்டியில் நுழைந்தவுடன் அந்த கசிவினை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் தீப்பெட்டி ஏற்றுகிறார். தீயானது பரவி ராம் என்ற பணியாளர் அந்த இடத்திலேயே இறந்து விடுகிறார். அவரின் மனைவி முதலாளிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்கிறார். அவரின் முயற்சியில் வெற்றி பெறுவாரா? காரணங்களை விளக்கி முடிவு செய்க.

9. Govindan is a owner of a Construction Company. He has undertaken to construct and lay down of railway lines spread over a long distance of 54 kms. He has appointed several workers for that purpose. A dispute has arisen relating to that work between the workers and Govindan, the employer. Govindan contends that his construction company is not a factory, being it has no 'premises' within the meaning of the Factories Act. Will he succeed in his attempt? give reasons.

கோவிந்தன் என்பவர் கட்டுமான கம்பெனியின் முதலாளியாவார். அவர் புகைவண்டி இரும்பு பாதை 54 கிலோ மீட்டர் தொலைவிற்கு போடுவதற்கான பணியினை ஏற்றுக்கொள்கிறார். அந்த வேலைக்காக ஏராளமான பணியாளர்களை பணியில் அமர்த்துகிறார். பணியாளர்களுக்கும் முதலாளியான கோவிந்தனுக்கும் அந்தப் பணி சம்பந்தமாக சச்சரவு ஏற்படுகிறது. கோவிந்தன் தன்னுடைய கட்டுமான கம்பெனியானது தொழிற்சாலை அல்ல அதற்கு தொழிற்சாலைகள் சட்டத்தின் படி நிலையான கட்டிடம் இல்லை என்ற வாதத்தினை வைக்கின்றார். அவர் தன்னுடைய முயற்சியில் வெல்வாரா? காரணங்களைக் கூறுக.

10. Raja, is a worker and his services have been terminated by the employer, Gobi on the ground of fraud committed by him. He demanded for payment of Bonus. Gobi, the employer refused to pay Bonus. Will Raja succeed in his attempt? Give reasons.

ராஜா என்ற பணியாளர் மோசடி செய்து விட்டார் என்ற அடிப்படையில் அவரை பணியிலிருந்து முதலாளி கோபி நீக்கி விடுகின்றார். ராஜா, பணியாளர் தனக்கு மீதூதியம் வழங்கவேண்டும் என்று கோருகிறார். முதலாளி கோபி மீதூதியம் வழங்க மறுக்கிறார். ராஜா, அவரின் முயற்சியில் வெல்வாரா? காரணங்களைக் கூறுக.

———

(J)

**TA5E**

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023

Register No. | | | | | | | | |

**5428–22**

(For the candidates admitted from 2017-18 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define 'Tax' – Explain about Adam Smith's "Canon of Taxation" Doctrine.

   'வரி' என்பதை வரையறுத்து, ஆடம் ஸ்மித்தின் வரி விதிப்பு கொள்கையினை விளக்கவும்.

2. Explain "Income from Business or Profession" with deduction.

   "தொழில் அல்லது வியாபாரத்திலிருந்து" கிடைக்கும் வருமானத்தினை கழிவுகளுடன் விளக்கவும்.

3. Explain about the powers and functions of the Income Tax authorities under the Income Tax Act 1961.

   வருமான வரிச் சட்டம் 1961ன் கீழ் வருமான வரி அலுவலர்களின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is agricultural income? How agricultural income is treated for Income Tax purpose under the Income Tax Act, 1961?

   விவசாய வருமானம் என்றால் என்ன? 1961 வருமான வரி சட்டத்தின் கீழ் வருமான வரி விதிப்பிற்காக விவ்சாய வருமானம் எவ்வாறு மதிப்பிடப்படுகிறது?

5. Explain the Income from house property with deduction.

வீட்டிலிருந்து கிடைக்கும் வருமானத்தை கழிவுகளுடன் விளக்கவும்.

6. Explain the procedure for clearance of imported goods from the port under the Customs Act 1962.

சுங்க வரிச் சட்டம் 1962ன் கீழ் துறைமுக இறக்குமதி பொருட்களின் அனுமதி நடைமுறையினை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Previous year

முந்தைய ஆண்டு

(b) Perquisite

மேலூதியம்

(c) Works contract

பணி ஒப்பந்தம்

(d) Customs duties

சுங்க தீர்வைகள்

(e) Short term capital gain

குறுகிய கால மூலதன ஆதாயம்

(f) Income from other sources

மற்ற மூலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம்

(g) Integrated Goods and Services Tax.

ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mrs. Amutha is an agricultural officer working in Chennai. Her Annual Income from salary is Rs. 6,50,000. She paid Rs. 4,000 as monthly house rent. She received Rs. 22,000 as House Rent Allowance. Determine the taxable House Rent Allowance of Mrs. Amutha.

திருமதி. அமுதா ஒரு விவசாய அலுவலராக சென்னையில் பணி புரிந்து வருகிறார். அவரது ஆண்டு சம்பளம் ரூ. 6,50,000. அவர் வீட்டு வாடகைக்காக மாதம் ரூ. 4,000 செலவு செய்கிறார். மேலும் அவர் ரூ. 22,000 வீட்டு வாடகைப் படியாக வருடத்திற்கு பெறுகிறார். திருமதி. அமுதாவின் வரி விதிக்கக் கூடிய வீட்டு வாடகைப் படியினை தீர்மானிக்கவும்.

9. Alagu, a member of Scheduled Tribe is working as teacher in Kohima, head quarters of Nagaland. His Annual earning is Rs. 6,00,000. Determine his tax liability for the Assessment year 2022-23.

திரு. அழகு, என்பவர் ஆசிரியராக பணிபுரியும் பழங்குடி உறுப்பினர் ஆவார். நாகாலாந்து தலைநகர் கொஹிமாவில் பணிபுரிந்து வருகிறார். ஆண்டு சம்பளம் ரூ. 6,00,000 பெறுகிறார். 2022–23 வரிவிதிப்பு ஆண்டிற்கான அவரின் வரிவிதிப்பு விகிதத்தை தீர்மானிக்கவும்.

10. State with reason, how the following are treated in the assessment with relevant provision.

வரிவிதிப்பின் பொழுது பின்வருவன எவ்வாறு கருத்தில் கொள்ளப்படுகின்றன என்பதை தகுந்த வகையம் மற்றும் காரணங்களுடன் கூறுக.

(a) Retrenchment Compensation

ஆட்குறைப்பு நஷ்ட ஈடு

(b) Allowances.

படிகள்